

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 2025–26 ஆம் கல்வியாண்டிற்கு, செங்கல்பட்டு மாவட்டம், செய்யூரில் புதிதாக தொடங்க அறிவிக்கப்பட்டு, இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று (20.01.2026) திடீர் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது, சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு, கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் எஸ். மாதவன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று (20.01.2026) கன்னிமாரா நூலகக் கூட்டரங்கில் பள்ளிக்கல்வித் துறை வளர்ச்சித் திட்டங்கள், அறிவிப்புகள் குறித்து பள்ளிக்கல்வித் துறை உயர் அலுவலர்களுடன் விரிவான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. சந்தரமோகன், பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி ஜெயந்தி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலதிட்ட இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, மாதிரிப்பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், பள்ளிக்கல்வி க்கல்வி இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ.நரேஷ் உள்ளிட்ட பள்ளிக்கல்வித் துறை இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

### ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில்

# சைதை மேற்குப் பகுதி இளைஞரணி கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கினார்!

சென்னை, ஜன.21

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில் சைதை மேற்கு பகுதி இளைஞர் அணியின் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைகளை வழங்கினார்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதியில் இளைஞர் அணி ஆலோசனைக்கூட்டம் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் 19.01.2026 (திங்கட்கிழமை) மாலை 5 மணியளவில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் பங்கேற்று இளைஞர் அணியின் பணிகளை குறித்து பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்கினார்.

உடன் பொதுக்குழு உறுப்பினர்கள் களக்காடிஎல்லப்பன், மின்னல் கந்தப்பன், வட்டகழக செயலாளர்கள் சை.மு. சேகர், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன், இளைஞர் அணியின் சைதை மேற்கு பகுதி துணை அமைப்பாளர்கள் ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, பரத்குமார், இரா.வெங்கடேசன், ப.அருண்குமார், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் திலீப் மதிவாணன், க.ரஞ்சித், சந்தோஷ்குமார், எஸ்.பி. தினேஷ்வரன், ஐ.ராபர்ட், பாரதி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 335 வது நாள்!

## அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,ஜன.21-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 335 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (20.01.2026), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 83அ, R.K லிங்க் சாலை தாதம் குப்பம். 2) வட்டம் 83 விநாயகர் கோயில் அருகில் சிவலிங்கபுரம் கொரட்டூர் அக்கிரக்ஹரம். ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி. கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி. வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால் பி.செந்தில். வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிரு ஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### காட்டுமன்னார் கோவில் பாளையங்கோட்டையில் 33 கே.வி. துணை மின் நிலையம்

# ரூ.18 கோடியில் 110 கே.வி. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தும் பணி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜன 21 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் பாளையங்கோட்டையில் 33 கே.வி. துணை மின் நிலையத்தினை ரூ.18 கோடி மதிப்பீட்டில் 110KV துணை மின் நிலையமாக தரம் உயர்த்தும் பணியினை தொடங்கி வைத்தார்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், காட்டு மன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல் வன் ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், பாளையங்கோட்டையில் 33KV துணைமின் நிலையத்தினை ரூ.18 கோடி மதிப்பீட்டில் 110KV துணை மின் நிலையமாக தரம் உயர்த்தும் பணியினை நேற்று முன்தினம் (19.01.2026) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வளர்ச்சிக்காகவும் மேன்மைக்காகவும் ஏராளமான திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து பகுதிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், அரசால் செயல்படும் திட்டங்களின் பயன்கள் தகுதியுள்ள அனைவருக்கும் கிடைத்திட வேண்டும் என்பதற்காகவும் எண்ணற்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று ஸ்ரீமுஷ்ணம் பகுதியினை டெல்டா பகுதியாக அறிவித்துள்ளதால் டெல்டா பகுதிக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வழங்கப்படும். சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே.கூட்டுறவு சக்கரை ஆலை தற்போது முழுபயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளபது. எனவே இப்பகுதி விவசாயிகள் கரும்பு பயிரிட்டு இதனை நல்லமுறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் .

இன்றைய தினம் பாளையங்கோட்டை டெல்டா பகுதியில் உள்ள 33 KV துணை மின் நிலையத்தினை அப்பகுதியில் வசிக்கின்ற பொதுமக்களின் நலன் கருதி 110K துணைமின் நிலையமாக தரம் உயர்த்துதல் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்துணைமின்நிலையத்தின் பணிகள் முடிவுறும்பட்சத்தில் பாளையங்கோட்டை மேல்பாதி, பாளையங்கோட்டை கீழ்பாதி, வடக்குபாளையம், கொண்டசமுத்திரம், தண்டகாரன்குப்பம், பக்கரிமாணியம், அந்தோணியார்புரம், கொளத்தங்குறிச்சி, கொழை, வாலீஸ்பேட்டை, ராமாபுரம், கானூர், வலசக்காடு, சாத்தாவட்டம், கூடலை யாத்தூர், அண்ணா நகர் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம பகுதிகளில் உள்ள மின்நுகர்வோர்கள் பயன்பெறுவர். மேலும், பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு 24 மணி நேரம் மின்சார வசதி கிடைக்கும். குறிப்பாக விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் தங்குதடையின்றி கிடைத்திடவும் வழிவகை ஏற்படும். பாளையங்கோட்டை சுற்று வட்டார பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் சீர் செய்யப்படும். மேலும் புதியதாக அமையவுள்ள 33/11KV ஸ்ரீநெடுஞ்சேரி துணைமின் நிலையத்திற்கு 33KV மின்னூட்டம் அளித்திட ஆதாரமாகவும் துணைமின் நிலையம் அமையும் என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் தலைமை பொறியாளர், விழுப்புரம் சதாசிவம், தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் மேற்பார்வை பொறியாளர், கடலூர் பாலாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### வை.ம.அருள்தாசன் ஏற்பாடு ! திருவொற்றியூர் மேற்குப் பகுதி திமுக சார்பில்

# திராவிடப் பொங்கல் விழா மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி!

## எஸ்.சுதர்சனம் – கலாநிதி வீராசாமி – எஸ்.மோகன் துவக்கி வைத்தனர்!

சென்னை, ஜன.21-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் திராவிட பொங்கல் திருவிழாவை முன்னிட்டு மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் தலைமையில் 13.1.2026 அன்று இ. டி.பி.எஸ் ஸ்கோடா மைதானத்தில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம் பி, மாநில வர்த்தக அணி துணை தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான தி. நகர் எஸ். மோகன், மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் ஆகியோர் போட்டியினை துவக்கி வைத்தனர்.

பகுதி கழக நிர்வாகிகள் இ.குமரவேல், யு. எஸ். குறளரசன், எம். வஜ்ரவேல், வட்ட கழக செயலாளர்கள் டி. சேகர், கே.பவுல், கி. கண்ணன் ஆகியோரின் முன்னிலையில் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.ம. கண்ணதாசன் முன்னிலையில் நடைபெற்றது.

பகுதி விளையாட்டு அணி மு. பாபு, ந.ராஜா, ஆர். எஸ். யுவராஜ், ஜி.குணசேகர் வரவேற்பில் 25 அணிகள் பங்கேற்ற மாபெரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்று முதல் இடம் பிடித்த குமரன் சிசி அணிக்கு ரொக்கம் ரூ 25,000 யிரம் மற்றும் வெற்றிக்கோப்பை, இரண்டாம் இடம் பிடித்த 11 கில்லர்ஸ் அணிக்கு ரொக்கம் ரூ15000 யிரம் மற்றும் வெற்றி கோப்பை, மூன்றாம் இடம் பிடித்த லயன் கில்லர்ஸ் அணிக்கு ரொக்கம் ரூ 10000 யிரம் மற்றும் வெற்றி கோப்பை மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகள் ந. ராம்குமார், ஜி. தினேஷ் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சன்.முனியாண்டி, மாவட்ட இளைரணி அமைப்பாளர் ஆர் டி. மதன்குமார் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வீ. தியாக ராஜன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர். மோகனசுந்தரம் மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர். நவகுமார் தகவலை எஸ்.ரஞ்சித் டி.சக்கரவர்த்தி, நாகராஜ், வை.சின்னையன், மு.கார்த்திக், வி. கே. ஏழுமலை, கே. பாலு, ஆர். மதன்குமார் எஸ். ராஜேஷ்,

ஆர். நரேன்குமார், எம். ராமு, எஸ். வீரச்சந்திரன் பா . அஜித் , ராஜேஷ் , ஜி.கணேஷ், எஸ். வினோத், வி.சி. பிரபாகரன், எஸ் யுவராஜ்.எஸ். சதீஷ், ஜி. தினேஷ், எஸ்.கௌதம் , ஜவகர், ஜெ. விக்னேஷ்,கார்த்திக் எஸ். லோகு,ஜா,பா. லிஷ்வா,பா. யோகி, ஆட்டோ சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் திரளாக பங்கேற்றனர்.

### திருவொற்றியூர் மேற்குப் பகுதி திமுக சார்பில்

# வட்டச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கூட்டம்!

## எஸ். மோகன் பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் அறிக்கை!

சென்னை,ஜன.21-

திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல்.ஏ வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் ஏற்பாட்டில் பகுதி கழக நிர்வாகிகள்,

வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று 21.01.26 புதன் கிழமை மாலை 6:00 மணியளவில் பகுதி கழக அவைத் தலைவர் ந. திருசங்கு தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தி. நகர் எஸ். மோகன் பங்கேற்க உள்ளார்.

அது சமயம் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், BLA &2,BDA, BLC, BYA உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக இளைஞரணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜனவரி 25 வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சிறப்புரையாற்ற திருவொற்றியூர்க்கு வருகை தருவது குறித்து. ஓரணியில் தமிழ்நாடு பணிகள், நடைபெற்ற SIR பணிகள் குறித்து. கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப் படுகிறது.

இவ்வாறு திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசின் “உலகம் உங்கள் கையில்” என்ற திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ–மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் விழா எழும்பூர், எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடந்தது. இவ்விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, அக்கல்லூரியின் சேர்மன் வீ.எம்.முரளிதரன் முன்னிலையில் 2178 மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

### எல்.உதயகுமார் ஏற்பாட்டில்

# ஆர்.லோகநாதன் 22 ஆம் ஆண்டு நினைவு நாள் - நல உதவிகள்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!



சென்னை, ஜன. 21-

மயிலை கிழக்குப்பகுதி 124 வது முன்னாள் வட்ட செயலாளர் மறைந்த ஆர்.லோகநாதன் அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு நாள் - நலத்திட்டங்கள் வழங்கும் விழா இன்று (21.01.2026 புதன்கிழமை) முண்டகன்னி அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள மயிலை கிழக்குப்பகுதி பொருளாளர் அலுவலகத்தில் மதியம் 12 அளவில் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் - சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி MC, திருமதி விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஏ.தாஸ், வட்ட செயலாளர் மா. பா.அன்பு முன்னிலையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சி ஏற்பாடு : மயிலை கிழக்குப்பகுதி பொருளாளர் எல் . உதயகுமார்

இவ்விழாவில் பகுதி நிர்வாகிகள் எஸ். முனுசாமி, சீமன் சேகர், பி. எல்.தாஸ், எ. குமாரி , சு. வில்லவன் , வட்ட செயலாளர்கள் அ.தவனேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பொன்னுசாமி , மாமன்ற உறுப்பினர்கள் அ.ரேவதி, கீதா முரளி, த.விக்னேஷ்வரன், தி.தினகர், அருண் ராமஜெயம், ஆர்.பாலு, விஜய் வெங்கடேசன், லைன் கே. குமார், எஸ்.மோகன், கே. பாலகிருஷ்ணன், அயன் ஆர்.ரமேஷ், டி.ஜெகதீஷ் பாபு,

வி.மணிகண்டன், ப.பிரகாஷ், ஓவியர் ராஜேஷ், சி . எஸ் . சுந்தரமூர்த்தி, பி.யமுனா ராஜன், என்.சங்கர், ஜி.ராஜேந்திரன், எஸ். அரிபாபு, இளவரசன், ஆட்டோ பாபு, இஸ்திரி பாபு, இ.கண்ணன், ஜி. தர்மா வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணியை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் செங்குன்றம் பேரூர் திமுக சார்பில் பேரூராட்சி 4வது வார்டு கவுன்சிலர் கார்த்திக் கோட்டிஸ்வரன் ஏற்பாட்டில் பொங்கல் விழாவை முன்னிட்டு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கலந்துகொண்டு 2000 நபர்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞரணி தோழர்கள் கலந்துகொண்டனர்.



எழும்பூர் வடக்கு பகுதி, 78 வது வட்டத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு வட்டக் கழகத்தினருக்கு பொங்கல் பரிசுகள் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி வட்டக் கழகச் செயலாளர் சு. மனோகர் தலைமையில் பகுதி கழகச் செயலாளர் சொ.வேலு முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தல்படி வட்டக் கழகத்தினருக்கு பொங்கல் பரிசுகளை கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா வழங்கினார்.